## பிரிவு – 5

## அரசு வழங்கும் வரி பங்குத்தொகை

**5.5.1.** முந்தைய பிரிவில், 5.26 முதல் 5.30 வரையிலான அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி மன்றங்களின் 5 ஆண்டுகளுக்குரிய (1997–2002) நிதி ஆதார பற்றாக்குறையில், புதிதாக விதிக்க உத்தேசித்துள்ள வரிகளிலிருந்து கிடைக்கக்கூடிய கூடுதல் வருவாய்களும் மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் கிடைக்கக்கூடிய வரியல்லாத வருவாய் மூலம் எதிர்பார்க்கப்படும் ஒட்டு மொத்த சீரடைவும் கணக்கில் கொள்ளப்படவில்லை. ஏனெனில், இவை, அப்பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்படுவதைப் பொருத்தது.

**5.5.2.** இந்த ஆதாரப் பற்றாக்குறையைப் பின்வரும் வழிகளில் மட்டுமே நிறைவு செய்ய முடியும்.

(i) உள்ளாட்சி மன்றங்களே சொந்தமாக உருவாக்கும் நிதி ஆதாரங்கள்

(ii) கூடுதல் வரி ஒப்படைகள் மூலம் நிதி ஒப்படைகளை அதிகரித்தல் அல்லது மாநில அரசு அளிக்கும் பங்கை அதிகரித்தல்

(iii) மத்திய அரசும் மாநில அரசும் வழங்கும் மானியங்கள்

**5.5.3.** ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க, உள்ளாட்சி மன்றங்களுக்கு உயர் அடுக்குகளிலிருந்து அதாவது, அரசிடமிருந்து நிதி ஆதாரங்களை மாற்றம்செய்வது தொடர்பாக ஆய்ந்து வகுக்கப்பட்ட, விரிவான திட்டமொன்று அவசியம் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

இம்மாதிரி நிதி மாற்றங்களை எய்த ஒரு சிறந்த வலுவான நிதி ஆதார பகிர்வுமுறை அவசியம். அந்தப் பகிர்வுமுறை கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

**5.5.4.** (i) திறமை
(ii) நடுநிலை
(iii) வளர்ச்சி
(iv) சுயாட்சி

**5.5.5.** மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்கு, நிதி ஆதார ஒதுக்கீட்டு பகிர்வுமுறை, பின்வரும் கொள்கைகளின் அடிப்படையில் அமையப் பெறுதல் வேண்டும்.

(i) எளிமை
(ii) வெளிப்படையான திறமை
(iii) செயல்திறன்

(iv) தனி முனைப்பு
(v) முன்கூட்டி தெரிய வருதல்
(vi) அதிகாரபூர்வமான நிலை

நிதியுதவி அளிக்கும் தற்போதைய முறை

**5.5.6.** திருத்தியமைக்கப்பட்ட பகிர்வு முறை ஆய்வு செய்யும் முன்னர், தற்போதைய முறை குறித்து கீழே விவாதிக்கப்படுகிறது.

நகர்ப்பகுதி, ஊரகப் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள உள்ளூர் ஆதாரங்களிலிருந்து அரசு வசூலிக்கும் வரித் தொகையிலிருந்து அவற்றிற்கு வருவாய் ஒப்படை செய்யப்படுகிறது. இத்துடன் உள்ளாட்சி மன்றங்களுக்கு சில மாநில வரிகளிடமிருந்து ஒப்படை செய்யப்படும் வருவாய்களும் அவற்றுக்கு அளிக்கப்படுகின்றன. பிந்தைய இனத்தில்,பங்கீடுகள் முழுவதும் தற்காலிக அடிப்படையிலேயே செய்யப்படுகின்றன. நிரந்தரமான ஏற்பாடு எதுவும் வரையறுக்கப்படவில்லை.

**5.5.7.** ஊரக உள்ளாட்சி மன்றங்கள் மாநில அரசிடமிருந்து கிடைக்கும் கணிசமான மானியங்களையே குறிப்பாக, குறிப்பிட்ட நோக்கம் அடிப்படையிலான மானியங்களையும் வளர்ச்சி மானியங்களையுமே பெரிதும் சார்ந்துள்ளன. ஆனால், நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்கள் மிக சொற்ப அளவு மானியத்தையே பெற்று வந்தன. நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மாநில அரசு வழங்கும் மானியங்கள்தற்காலிக அடிப்படையிலானவையாகவும் தன்னிச்சையாக அளிக்கப்படுவனவையாகவுமே உள்ளன. சென்ற மூன்றாண்டுகளில், நகர்ப்பகுதியைச் சேர்ந்த மூன்று வகையான உள்ளாட்சி மன்றங்களுக்கும் மூலதனக் கணக்கிலும், வருவாய்க் கணக்கிலும் அளிக்கப்பட்ட மொத்த மானியங்களில் பெருத்த வேறுபாடுகள் காணப்படுவதிலிருந்து இது தெளிவாகிறது. ஒரு சிறந்த உள்ளாட்சி மன்ற நிதி ஏற்பட்டின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று, நிதி பற்றி முன் கூட்டித் தெரிந்து கொள்வதாகும். தற்போதுள்ள அமைப்பு முறை அவ்வாறு இல்லை. இதனால் உள்ளூர் நிலையில் செலவு தொடர்பான திட்டமிடல் பணி பாதிக்கப்படுகிறது. நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி அளவு பின்வருமாறு:–

வருவாய் மானியங்கள்

**5.5.8.** தற்போது நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படும் வருவாய்க் கணக்கிலான மானியங்களின் அளவு, மாநகராட்சிகளைப் பொறுத்தவரை அவற்றின் மொத்த வருவாயில் 3.58 சதவீதமாகவும், நகராட்சிகளைப் பொறுத்தவரையில் அவற்றின் மொத்த வருவாயில் 4.24 சதவீதமாகவும், பேரூராட்சிகளைப் பொறுத்தவரை அவற்றின் மொத்த வருவாயில் 2.52 சதவீதமாகவும் உள்ளது. தொகையளவில்கூட, மானியங்களில் மிகச் சொற்ப மாற்றங்களே ஏற்பட்டுள்ளன.

மூலதன மானியங்கள்

**5.5.9.** 1993–94 ல் மாநகராட்சிகள் மானியமாக :ரூ.4.42 கோடி பெற்றன. ஆனால், குறிப்பிட்ட மாநிலத் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் இதில் அடங்காது. இது, அவற்றின் மொத்த வருவாயில் 11 சதவீதம் ஆகும். அதே ஆண்டில், அனைத்து நகராட்சிகளும் சேர்ந்து மொத்தம் ரூ.3.18 கோடி மானியம் பெற்றிருந்தன. இது, அவற்றின் மொத்த மூலதன வருவாயில் 5.45 சதவீதமாகும். பேரூராட்சிகள் மொத்தம் ரூ.4.79 கோடி பெற்றிருந்தன. இது, அவற்றின் மொத்த மூலதன வருவாயில் ரூ.15.87 சதவீதமாகும்.

கடன்கள்

5.5.10. கடன்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும் மூலதன நிதியுதவியின் முக்கிய அம்சமாக விளங்குகின்றன. மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளின் மொத்த வருவாய்களில் கடன்கள் முறையே ரூ.75.6 சதவீதம், 22.5 சதவீதம், 17.19 சதவீதம் ஆகும்.

5.5.11. 5.5.4. மற்றும் 5.5.5. ஆகிய பத்திகளில் குறிப்பிடப்பட்ட கொள்கைகளையும் நோக்கங்களையும் கருத்திற்கொண்டு, மாநில நிதி ஆணையம் நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு மூன்று நிலைகளைக் கொண்ட மாதிரி ஏற்பாடு ஒன்றைப் பற்றி அடுத்து வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, வரி வருவாய்களை மத்திய அரசு, மாநிலங்களுக்குப் பிரித்துக கொடுப்பது தொடர்பான முழுதளாவிய கோட்பாடு(Global Sharing) குறித்தும் பரிசீலிக்கப்பட்டது. அனைத்து வரி ஆதாரங்களை அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட வரி ஆதாரங்களின் தொகுப்பு, பிரித்தளிக்கத்தக்க பொது தொகுப்பு நிதி ஒன்றை ஏற்படுத்த வழி வகுக்கும். பத்தாவது நிதி ஆணையம் மத்திய அரசின் வருவாய்களில் 23 சதவீதம் மாநிலங்களுக்கு மத்திய பகிர்ந்தளிக்கும் தொகுப்பு நிதி மூலம் வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்திருக்கிறது. முழுதளாவிய இந்தப் பங்கீட்டுக் கோட்பாட்டில் நிறைகளும் குறைகளும் உள்ளன.

5.5.12. மத்திய அரசின் பிரித்தளிக்கத்தக்க பொதுத் தொகுப்பிலிருந்து தொகை பகிர்வு தேடுவது மாநிலங்கள் மட்டுமே. மாநில அளவிலுள்ள பிரித்தளிக்கத்தக்க பொதுக் தொகுப்பைப் பொறுத்தவரையில், ஆறு வகையான பகிர்வு கோருவோர் இருக்கின்றனர். அதாவது, நகர்ப்பகுதியைப் பொறுத்தவரையில் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளும் ஊரகப் பகுதியைப் பொறுத்தவரையில் மாவட்ட பஞ்சாயத்துக்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளும் மேலும் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள தனிப்பட்ட அமைப்புகளுக்கு இத்தொகுப்பிலிருந்து நிதி பகிர்ந்து வழங்க வேண்டும். எனவே, மாநில அளவில் நிதி ஆதாரங்களை உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் பணி மிகவும் விரிவானதாகவும் சிக்கலானதாகவும் இருக்கிறது.

5.5.13. பகுதி II நிதி ஆதாரப் பெருக்கம் என்பதன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு பரிந்துரைகள், உள்ளூர் நிதி ஆதாரங்கள் வசூலிக்கப்படுவதை மேம்படுத்துவதையும், அத்துடன் மாநில வருவாயின் பல்வேறு ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து உயர் அளவில் தொகைகள் ஒப்படை செய்யப்படுவதையும் நோக்கமாகக் கொண்டவையாகும். மாநில வருவாயிலிருந்து செய்யப்படும் ஒப்படைகள், அந்தந்த உள்ளாட்சி மன்றங்களின் வரி ஆதாரங்களைப் பொறுத்து அமையும். இந்த வரி ஆதாரங்கள், உள்ளூர் நிலைமையைப் பொருத்து அமைவனவாகும். எனினும் பகுதி II இல் கண்டுள்ள பரிந்துரைகளின்படி எதிர்பார்க்கப்படும் உதவியின் அளவு கருத்திற் கொண்டு, மாநில மொத்த வரி வருவாயிலிருந்து குறிப்பிட்டதொரு சதவீதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிதிப் பகிர்வு முறை பற்றி பரிசீலிக்கப்பட்டது. பொதுப் பகிர்வு முறை அரசுக்கு ஏற்புடையதாக இல்லை என்றால்தான் தனிப்பட்ட வரி ஆதாரங்களின் அடிப்படையிலான பரிந்துரை பொருந்தும்.

5.5.14. மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, மொத்த வரி வருவாயில் குறிப்பிட்டதொரு சதவீதம்,நகர்ப்பகுதி/ஊரகப்பகுதிகளைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களின் பல்வேறு அடுக்குகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிதிப் பகிர்வுமுறை குறித்து, அடுத்துவரும் பத்திகளில் விவாதிக்கப்படுகிறது. இதேபோன்று, ஒரே அடுக்கைச் சேர்ந்த உள்ளாட்சி மன்றங்களுக்கிடையேயான பகிர்வு, மாநில நிதி ஆணையம் வகுத்தளித்துள்ள வழிகாட்டிக் கோட்பாடுகளின்படி அமையலாம். மாநில நிதி ஆணையம், உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதிப் பகிர்வு செய்யும் தற்போதைய முறையிலுள்ள குறைபாடுகளையும்,

முந்தைய பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் விளக்கிக் கூறப்பட்ட நிதித் தேவைகளையும் கருத்திற்கொண்டு, நிதி ஆதார ஒதுக்கீட்டு ஏற்பாடு ஒன்றை மாநில நிதி ஆணையம் வகுத்துள்ளது.

**5.5.15.** வரி வாரியாக பகிர்ந்தளிப்பது குறித்தும் மொத்த வரி வருவாயிலிருந்து பொது பங்கீடு செய்வது குறித்தும் மாநில நிதி ஆணைம் பரிசீலனை செய்தது. மாநில அரசு விதிக்கும் வரிகளில் சில உள்ளாட்சி மன்றங்களுக்குரிய வரியாக, ஒதுக்கப்பட்டு வருகின்றன. அவையாவன: உள்ளூர் செஸ்வரி, உள்ளூர் செஸ் மேல்வரி, முத்திரைத்தாள் தீர்வை மேல்வரி. இவை பற்றிய விவரங்கள் பின்வரும் பத்திகளில் 'அ' தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் வசூல் திறன் மற்றும் சிறந்த வசூல் நிருவாகத்தைக் கருத்திற்கொண்டு இவற்றின் வசூல் பணியை அரசே கவனித்து வருகிறது. இது உள்ளூர் வள வாய்ப்புகளைப் பொறுத்திருப்பதால், வசூல் அளவு வேறுபடுகிறது. இந்த வரிகளை, பொதுப் பங்கீட்டில் சேர்ப்பது விரும்பத்தக்கது அல்ல. இதை உள்ளாட்சி மன்றங்களும் ஏற்றுக் கொள்ளமாட்டா. இவ்வகை பங்கீடு, தற்போதிருக்கும் நிதி ஆதாரங்களை மோசமாக பாதிப்பதோடு, வளமான உள்ளாட்சி மன்றப்பகுதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பிரித்து அவ்வாறில்லாத மற்றொரு உள்ளாட்சி மன்றப் பகுதிக்கு வழங்குவதான முறையற்ற பங்கீட்டுக்கும் வழிகோலும். ஆகவே, வரி உள்ளாட்சி மன்றங்களால் வசூலிக்கப்படுபவையாக இருந்தாலும் அல்லது அரசால் வசூலிக்கப்படுவதாக இருந்தாலும், உள்ளாட்சி மன்றங்களுக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள வரிகள் தொடர்பாக, தற்போது இருக்கும் வருவாய் பகிர்வு முறையே தொடர்ந்து பின்பற்றலாம் என மாநில நிதி ஆணையம் முடிவு செய்துள்ளது.

**5.5.16.** மாநில வரி வருவாயைப் பகிர்ந்து கொள்ளும் முறை குறித்து அடுத்து வரும் அத்தியாத்தின் தொகுப்பு – **ஆ**ல் கொடுக்கப்பட்டுள்ளது. இதில், கேளிக்கை வரி நீங்கலாக, மாநில நிதித்துறை அளித்த மதிப்பீடுகளின் அடிப்படையிலான அனைத்து வரிகளும் அடங்கும்.

**5.5.17.** உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அளவு ஒப்படைகளை வழங்குவது, அவை சொநத நிதி ஆதாரங்ளைத் திரட்டுவதற்கான ஊக்கத்தைக் குறைத்துவிடும் வாய்ப்பு இருப்பதால், ஒப்படைகள், துணை வருவாய்களாக மட்டுமே இருக்க வேண்டுமேயன்றி, அவற்றுக்கு மாறாக இருக்கக்கூடாது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் தெளிவான பொறுப்புகள் வரையறுக்கப்பட வேண்டும்.

**5.5.18.** எனினும், மாநில வரிகளிலிருந்து பொதுப் பகிர்வின் சதவீதத்தைக் கணக்கிட, பகுதி IIல் கண்டுள்ள பரிந்துரைகள் ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் கீழே தொகுப்பு **அ** லும் **ஆ** லும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**I.** தொகுப்பு **அ–** உள்ளாட்சி மன்றங்களுக்குச் சொந்தமாக ஒதுக்கப்பட்டு, ஆனால் அரசால் வசூலிக்கப்படுகின்ற வரிகள் இதில் அடங்கும். 1997–98 ஆம் ஆண்டுக்கான வருமான அனுமான மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ள இனங்களில் பின்வருமாறு அடங்கும். இவற்றுள் கேளிக்கை வரி நீங்கலாக ஏனையவை அரசு அளித்த மொத்த வரி வருவாய் மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை.

| | | 1997–98ஆம் ஆண்டிற்கான முன் மதிப்பீடு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| a) | முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி (பத்திரப் பதிவுத்துறை ஆலோசனைக் கூட்டததல குறிப்பிட்ட 1995–96 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டவை) | 230.00 |
| b) | உள்ளூர் செஸ்வரி, உள்ளூர் செஸ்மேல் வரி (1990 இல் தாமோதரன் குழு கணக்கிட்ட அடிப்படை நில வரிகளின்படி) (ரூ.5.30 கோடி) | 30.00 |
| c) | கேளிக்கை வரி | 120.00 |
| | மொத்தம் | 380.00 |

II. தொகுப்பு ஆ- இம்மாநிலத்தின் நிகர வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கக் கூடிய வரி மாற்றங்களுக்கு மையக் கருவாக அமைகிறது. சில தீர்வைகள், வரிகள் குறித்து பகுதி II-ல் மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்துரை செய்திருந்த பங்குகளைச் சேர்த்தும் 1997–98 ஆம் ஆண்டிற்கான, ஏனைய மாநில வரிகளின் மதிப்பீட்டிவிருந்தும் இந்த அளவும் சதவீதமும் கணக்கிடப்பட்டுள்ளது.

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| a) | விற்பனை வரி | |
| b) | மோட்டார் வாகன வரி | 620.00 |
| c) | மாநில ஆயத் தீர்வை வருவாய் | |
| d) | ஏனையவை அனைத்தும் | |
| | மொத்தம் | 620.00 |

தொகுப்பு அ-ல் சேர்க்கப்பட்டுள்ள கேளிக்கை வரியை கழித்தது போக, நிகர மாநில வரி வருவாய் ரூ.7747 கோடி ஆகும். நிகரத்தின் தொகுப்பு ஆ-ன் சதவீதம் 8 ஆகும்.

5.5.19. உள்ளாட்சி மன்றங்களின் கூடுதல் வரி மற்றும் வரியல்லாத ஏனைய வருவாய்களையும் மிஞ்சி ஏற்படுகின்ற பற்றாக்குறையை இட்டு நிரப்ப வேண்டியதின் அவசியம் பற்றி அறிய ஒரு சில தனிப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் வரி விதிப்பு பற்றாக்குறை பரிசீலிக்கப்பட்டது. 5.25 முதல் 5.31 வரையிலான அட்டவணைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஒட்டு மொத்தப் பற்றாக்குறையானது, தனிப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் நிலையைப் பிரதிபலிப்பதாக இல்லை. உண்மையான பற்றாக்குறை நிலையையொட்டி, சில உள்ளாட்சி மன்றங்களின் மாதிரிகளைப் பரிசீலனை செய்த பிறகு, மாநில நிதி ஆணையம் மாநிலத்தின் மொத்த நிகர வரி வருவாயிலிருந்து 1997 முதல் 2002 வரையிலான 5 ஆண்டுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அளவை நிர்ணயம் செய்துள்ளது.

பகிர்வு

**5.5.20.** மாநிலத்தின் நிதி இடர்ப்பாடுகளைக் கருத்திற்கொண்டு, எவ்வளவு தொகை ஒதுக்க இயலும் என்பதைப் பரிசீலித்து, மாநிலத்தின் நிகர வரி வருவாயிலிருந்து பிரித்துக் கொடுக்க வேண்டிய அளவு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. முதல் ஆண்டிலேயே, திடீரென அதிக அளவில் பிரித்துக் கொடுக்கப்படும் நிதியை முறையாகப் பயன்படுத்துவதற்கான உள் கட்டமைப்பு, உள்ளாட்சி மன்றங்களில் இருக்குமா என்பது இங்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விசயமாகும். ஏனெனில், அளிக்கப்படுகின்ற நிதியைச் சரிவர நிர்வகித்துப் பயன்படுத்துவதற்கு அவை ஆயத்தமாக வேண்டும். அத்தகையதொரு சூழ்நிலையில், அதாவது 2001–2002 ஆம் ஆண்டிலாவது அடைகின்ற வகையில், நிதிப் பகிர்வை படிப்படியாகச் செயல்படுத்தலாமா என்பது குறித்து மாநில நிதி ஆணையம் பரிசீலனை செய்தது. அதற்கிணங்க, படிப்படியான முறையில் நிதியைப் பிரித்துக் கொடுப்பதற்கான ஒட்டு மொத்த சதவீத அளவை மாநில நிதி ஆணையம் நிர்ணயம் செய்தது. ஏற்ற வீத முறையில், ஒவ்வொரு ஆண்டுக்குமான சதவீத அளவு வருமாறு:–

| | |
|---|---|
| 1997 – 1998 | 8 சதவீதம் |
| 1998 – 1999 | 9சதவீதம் |
| 1999 –2000 | 10சதவீதம் |
| 2000 – 2001 | 11சதவீதம் |
| 2001–2002 | 12சதவீதம் |

**பகிர்வுமுறைப் பங்கிலிருந்து தனி வரி**

**5.5.21.** அந்த நிதி ஆண்டுகளுக்கு முறையே 8, 9, 10, 11 மற்றும் 12 சதவீத அடிப்படையில் தொகுப்பு ஆ–க்கு பிரித்துக் கொடுக்கப்படும் தொகையை நிதிப் பகிர்வுக்குப்பின் எழக்கூடிய நிலைமைகளைச் சமாளிப்பதற்கு ஏற்றவகையில் 15 சதவீதத் தனிநிதியை ஒதுக்கிய பின்னர், உள்ளாட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கலாம் என்று ஆணையம் பரிந்துரைக்கிறது.

**சமன்பாட்டு நிதியும் ஊக்க நிதியும்:**

(1) புதிதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள பங்கீட்டுக்கோட்பாடுகளைச் செயற்படுத்துகையில் ஏற்படக் கூடிய குறைகளை நிறைவு செய்ய சமன்பாட்டு நிதி

(2) உள்ளூர் நிதி வசூல் முயற்சிகளையும் ஊரக உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களையும் (அதாவது, வட்டு வரி இணை மானியம், உள்ளூர் செஸ் மேல்வரி இணை மானியம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு) தற்போது அளிக்கப்படுகின்ற ஊக்க மானியத்தைத் தொடர்ந்து அளிப்பதற்கான ஊக்க நிதி. இதன் ஒரு பகுதியை, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில், வரி வசூலில் செய்யப்படும் சாதனைக்கும் பரிசாக அளிப்பதற்கு பயன்படுத்தலாம். ஊக்க நிதியின் ஒரு பகுதியை மாநில அரசால், வகுக்கப்படக்கூடிய விரிவான திட்டத்தின் அடிப்படையில், சிறந்த நிறுவனம், சிறந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர், சிறந்த பணியாளர்களுக்கு வெகுமதி அளிக்கவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**5.5.22.** முந்தைய பத்திகளில் தெரிவிக்கப்பட்டவாறு, பகிர்ந்தளிக்கத்தக்க தொகுப்பு ஆ ன் கீழ், பொதுப் பகிர்வுக்குக் கிடைக்கக்கூடிய மொத்த நிகர ஒதுக்கீட்டுத் தொகையில் 15 சதவீதம் சமன்பாட்டு நிதிக்கும் ஊக்க நிதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 85 சதவீதம் நகர்ப்பகுதி மற்றும் ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு இடையேயும் உள்ளாட்சி மன்றங்களின் பல்வேறு அடுக்குகளுக்கு இடையேயும் மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த கணக்கு முறையின் அடிப்படையில் பகிர்ந்து கொள்வதற்காக ஒதுக்கப்படலாம். இந்த சிறப்பு நிதி மாநில அளவில் வைத்து வரப்படலாம்.

**5.5.23.** இந்தப் புதிய முறையின் கீழ் நிதிகளைப் பகிர்ந்தளிப்பதானது, இதுவே முதல்முறை என்பதையும், இந்தப் புதிய முறை உரிய அளவுக்குச் செயல்பட முடியாத சில நேர்வுகள் இருக்கக்கூடும் என்பதையும் கருத்திற்கொண்டு சமன்பாட்டு நிதி ஏற்படுத்தலாம் எனக் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. இதற்குத் தேவையான நிதியின் அளவை, தற்போது உள்ள நிலையில் முடிவு செய்ய இயலாது. எனவே, தற்காலிகமாக ஒரு தொகை ஒதுக்கப்படலாம் என கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. பங்கீட்டின் முதல் ஆண்டில் கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு, வருங்காலத்திற்கான தனி நிதி பொருத்தமான முறையில் மாற்றி அமைக்கப்படலாம். சமன்பாட்டு நிதியில், பகிர்வு செய்யப் படாமல் தொகை ஏதாவது எஞ்சியிருக்குமானால், பொதுப் பங்கீட்டுக்காக வகுத்தளிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் அத்தொகையை அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் பகிர்ந்தளிக்கலாம். எனவே, தனி நிதியைத் திருப்பி ஒப்படைக்கும் நிலை ஏற்படாது.